ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 43 வேலைகளில் கடன் கொடுத்தோர் ரூபா 4,070,288 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்குகள் சரி செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | கடன் கொடுத்தோர் பெறுமதி ரூபா 250,446 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான வேலைக் கடன் கொடுத்தோர் பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். | ஜர்னல் ஊடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (இ) | களஞ்சிய பொருட்கள் பெறுவனவுகளின் பெறுமதி, ரூபா 149,417 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்து கொள்ள வேண்டும். | சில கொள்வனவுகள் களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்டு இருப்புக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்படாது வேலைத்திட்ட செலவுகளில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமை இவ் வித்தியாசத்திற்கு காரணமாகும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 1,154,760 குறைத்து கணக்கீடு | கணக்குகளை சரி செய்யது கொள்ள | கணக்கு குறைபாடுகளை சீர்செய்து 2019.12.31 |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | திகதிக்கு இறுதிக் கணக்குகளை சரியாக தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |
| (உ) | வருடாந்த கடை வாடகை ரூபா 406,000 உம் வருடாந்த நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 11,535,417 உம் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்யது கொள்ள வேண்டும். | கணக்கு குறைபாடுகளை சீர்செய்து 2019.12.31 திகதிக்கு இறுதிக் கணக்குகளை சரியாக தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான உபகரண செலவினம் ரூபா 451,520 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்யது கொள்ள வேண்டும். | கணக்கு குறைபாடுகளை சீர்செய்து 2019.12.31 திகதிக்கு இறுதிக் கணக்குகளை சரியாக தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம், 8 கணக்கு விடயங்களின் மீதிகளைதுணைப் பதிவேடுகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,391,374 ஆன இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சீர்செய்ய வேண்டும் | கணக்கு குறைபாடுகளை சீர்செய்து 2019.12.31 திகதிக்கு இறுதிக் கணக்குகளை சரியாக தயாரிப்பதாக அறிவிக்கிறேன். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 877,112 ஆனது. | கிடைக்க வேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும் | அறவிடுவதற்காக பல வேலைத்திட்டங்களை செயற்படுத்துகிறேன். |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள

| | | |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க | துரிதமாக கடன்கொடுனர் மீதிகளை செலுத்தி |

| | | |
|---|---|---|
| தொகை ரூபா 95,939 ஆனது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | முடிவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இருப்பு பதிவேடுகள், கோவைகள், வருமான பதிவேடுகள் மற்றும் முற்பண பதிவேடுகளை கணக்காய்விற்கு சமர்பிக்காததனால், கூட்டுத் தொகை ரூபா 3,079,609 ஆன 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஆய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | பதிவேடுகளை நாளாதுவரையாக பேணி, 2019 இறுதிக் கணக்குகளை சமர்பிக்கும் போது முன்வைக்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவு. | நிலுவை வீத வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | வீத வரி சேகரிக்க நடமாடும் சேவையை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | 571 (3) | 02 வருடங்களை விஞ்சிய 83 வைப்புகள் தொடர்பாக நடவக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரச வருமானத்திற்கு எடுக்கவோ அல்லது குறித்த நபர்களுக்கு செலுத்தவோ நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 1646 | வாகனங்களிற்குரிய ஓட்டக் குறிப்புகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில் | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை | இது தொடர்பாக விடய அலுவலர்கள் மற்றும் சாரதிகள் அறிவூட்டப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லை. | எடுக்க வேண்டும். | னர். |
| (இ) | திறைசேரி சுற்றறிக்கை<br>1971 இன் 48 ஆம் இலக்க உள்ளூராட்சி மீதான விஷேட ஏற்பாட்டு சட்டம் மற்றும் 2008 திசெம்பர் 31 திகதிய 434 இலக்க பொது நிதி சுற்றறிக்கை. | 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை புதிய பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள வேண்டிய போதும், 2011 ஆண்டிற்கு பின் புதிய பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டு முதல் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிய போதும், பதிலளிக்கப்படவில் லை. |

1.5 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான அதிகாரம் இல்லாமல் முன்னைய ஆண்டுகளின் கூட்டுத் தொகை ரூபா 5,727,099 ஆன வேலை கடன் கொடுத்தோர் மற்றும் வேலை கடன் பட்டோர் மீதியொன்று ஆண்டினுள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,546,011 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 55,794,420 ஆனது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட் ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 11,720,665 | 11,196,750 | 10,959,827 | 4,830,771 | 11,281,000 | 11,790,150 | 11,067,117 | 5,755,314 |
| ii | வாடகை | 2,662,600 | 1,586,510 | 1,627,680 | 24,090 | 1,853,000 | 1,379,230 | 1,443,320 | 62,010 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,874,200 | 2,476,266 | 2,482,266 | 18,000 | 2,400,000 | 2,298,541 | 2,423,070 | 21,405 |
| iv | ஏனைய வருமானம | 47,029,500 | 52,974,896 | 53,353,773 | 97,750,424 | 45,663,400 | 45,972,587 | 17,089,025 | 66,994,365 |
| | கூட்டுத் தொகை | 64,286,965 | 68,234,422 | 68,423,546 | 102,623,285 | 61,197,400 | 61,440,508 | 32,022,532 | 72,833,094 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்ததகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்ம்பர் 31 திகதிக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 85,750 நிலுவை ஏக்கர் வரித் தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகையை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். | குத்தகைகாரர்களை இனங்காண முடியாத காரணத்தால், அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு நிலுவை தொகையை பதிவழிக்க நடவடிகை எடுக்கிறேன். |

### 2.2.3 ஏனைய வருமானம

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) குழாய் கிணறு வருமானம்** | | |
| அதிகார பிரதேசத்தினுள் நிலவும் 29 செயற்படும் குழாய் கிணறுகளுக்கு பதிலாக 328 இற்காக பில் இடப்பட்டிருந்ததனால், 2018 ஆண்டு இறுதியில் நிலுவை குழாய் கிணறு வருமானம் ரூபா 801,163 ஆக இருந்தது. | சரியான முறையில் பில் இடப்பட்டு வருமானம் சேகரிப்பதன் முன்னேற்றத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும். | தொடர்ந்தும் தவறான முறையில் பில் இடப்பட்டுள்ள ரூபா 801,163 ஆன தொகையை முறையாக பதிவழிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) முச்சக்கர வண்டி கட்டணம்** | | |
| (i) வருடம் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 536,400 ஆன நிலுவை தொகையிலிருந்து ஆண்டு இறுதி வரையும் ரூபா 391,500 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை முச்சக்கர வண்டி வருமானம் சேகரிப்பதன் முன்னேற்றத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும். | நிலுவை முச்சக்கர வண்டி கட்டணம் செலுத்துமாறு முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | முச்சக்கர வண்டிகள் தொடர்பாக 2014 ஆண்டின் பின் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த ஆண்டில் ஆய்வொன்றை மேற்கொண்டு நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) விளம்பர அறிவித்தல் பலகை வருமானம்

| | | | |
|---|---|---|---|
| (i) | 19 வியாபார நிறுவனங்களில் காட்ச்சிப்படுத்தப்பட்டிருந்த 82 அறித்தல் பலகைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 179,149 ஆன தொகை அறவிடப்படவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் செலுத்துமாறு குறித்த நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | விளம்பர அறிவித்தல் தொடர்பாக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆய்வொன்று உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். | அவ் ஆய்வை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையேரூபா 2,108,233உம் ரூபா 59,609,106 ஆனது. | வருமானம் சேகறிப்பதன் செயலாற்றலை மேம்படுத்த வேண்டும். | 2019 ஆண்டில் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,295,034 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,849,360 கிடைத்திருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) வேலைகள் மேற்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை அதிகார பிரதேசத்தினுள் நிலவும் 07 சமுதாய நீர் கருத்திட்டங்களின் மற்றும் சபையின் ஓர் நீர் கருத்திட்டத்தின் நீர் மாதிரி பரிசீலனையின்றி விநியோகிக்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | நீர் மாதிரி பரிசீலனையொான்று மேற்கொள்ளப்படவில்லை என ஏற்றுக் கொள்வதுடன் , இந்த வருடத்தில் நீர் மாதிரி பரிசீலனையொான்றை மேற்கொள்கிறேன். |

(

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டினுள் பெண்கள் அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்கள் போன்ற 09 உறுப்படிகளின் கீழ் ரூபா 540,000 ஆன ஒதுக்கீடு ஏற்படுத்திருந்த போதும், எந்தவொரு வேலைத்திட்டமும் நடைமுறைபடுத்தப்படவில்லை. | வருடாந்தம் நடைமுறைபடுத்த வேண்டிய வேலைத்திட்டங்களை நடைமுறைபடுத்த வேண்டும். | இந்த வேலைத்திட்டங்களிற்காக வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இந்த ஆண்டில் நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. |

(ஆ) கழிவுப் பொருள் முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகார பிரதேசத்தினுள் தினந்தோரும் ஒன்றுசேரும் கழிவுகளைஈடுபடுத்தி கொம்போஸ்ட் உற்பத்தியை ஆரம்பிப்கது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்கவில்லை | கொம்போஸ்ட் உற்பத்தியினூடாக கழிவு பொருள் முகாமைத்துவத்திற்குப ங்களிப்பொன்றை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி ஒன்றை பெற்றுக் கொண்டதன் பின்னர் கழிவு பொருள் முகாமைத்துவத்திற்கு முறையான வேலைத் திட்டமொன்றை தயாரிக்கிறேன். |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் இலக்கம் NP/SP/SDG/17 கொண்ட சுற்றறிகை பிரகாரம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் 2018 ஆண்டினுள் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான பாதீட்டினூடாக இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |

3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா சபையின் பதிவு செய்யப்பட்ட ஹோட்டல்கள் தொடர்பாக தகவல்களை பெற்றுக்கொண்டு வருமானம் அறவிடல் செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு பெற வேண்டிய வருமானம் சேகரிக்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றுலா சபையிலிருந்து குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தகவல்கள் கிடைததவுடனே இந்த வருடம் முதல் அறவிடுவதற்கு எதிர்பார்க்கிறேன். |
| (ஆ) | 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை காலத்தினுள் பெற்ற ரூபா 1,344,540 ஆன அன்பளிப்பு தொகையினை பிரதேச சபையின் அபிவிருத்திற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. | சபையின் அபிவிருத்திற்காக ஈடுபடுத்த முடியுமான பணத்தை அதற்காக முறையாக ஈடுபடுத்த வேண்டும். | இந்த அன்பளிப்பு தொகையின் மூலம் நடைமுறைபடுத்துவதற்காக கருத்திட்ட மதிப்பீடொன்று தயாரிக்கப்படுகிறது. |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 10 வெற்றிடங்கள் மற்றும் ஒர் மிகை காணப்பட்டன. | வெற்றிட பதவிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு மற்றும் மிகை பதவியை | பாலர் பாடசாலை ஆசிரியர் 02 பதவிகளை அங்கீகாரத்திற்காக உள்ளுராட்சி ஆணையாளருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுப்பியுள்ளதுடன், ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. |
| (ஆ) | சேவையை விட்டுச்சென்ற, மரணித்த மற்றும் இடமாற்றம் பெற்று சென்ற 12 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 169,822 ஆன கடன் மீதியொனறை மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவிடும் முறைமையை மேலும் முறையாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கடன் மீதிகளை பிணையாளிகலிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன்,இடமாற்றம் பெற்று சென்ற ஊழியர்களின் கடனை சம்பளத்திருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (இ) | ஆளணியின் பயிற்சிக்காக ஏற்பாடு செய்திருந்த ரூபா 200,000 பெறுமதியில் ரூபா 146,983 ஆன தொகையொன்று உபயோகிக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி வேலைத்திட்டத்தினால் ஆளணியின் செயலாற்றளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். | பயிற்சி நிகழ்சித்திட்ட திட்டத்தின் பிரகாரம், மேற்கொள்வதற்கு முடியாமலிருந்தாக ஏற்றுக்கொள்கிறேன். |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டினுள், 168 பொது மக்கள் முறன்பாடுகள் கிடைத்திருந்த போதும், 89 முறன்பாடுகளை பரிசீலனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது மக்கள் முறன்பாடுகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டும். | துரிதமாக பொது மக்கள் முறன்பாடுகளை தீர்ப்பதற்கான முறையொன்றை எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சுற்றாடலிற்கு பாதிப்பேற்படும் விதத்தில் நடாத்தப்படும் வாகன சேவை நிறுவனத்திற்கு எவ்வித பரிசீலனையுமின்றி 2017 ஒக்டோபர் 16 முதல் 2018 ஒக்டோபர் 15 வரை சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | சரியான உறுதிப்படுத்தலுடன் வியாபார அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், விபரங்களை கணக்காய்விற்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

3.5 சொத்துக்கள் முகாமை

விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| செலுத்தக்கூடிய நிலையிலுள்ள ரூபா 18,198,144 பெறுமதியான 07வாகனங்கள் 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரையான காதல வீச்சளவினுள் குறை பயன்பாட்டுடன் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை விளைவற்றதாக மற்றும் குறைபயன்பாடின்றி பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலத்தில் விற்பதற்கான பரிந்துரையை பெற்றுக் கொள்ள பிரதான அமைச்சிற்கு அனுப்பப்படட்டுள்ளது. |

3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படவேண்டும். | 2019 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் காணி சுவீகரிப்பது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,000,000 ஆன ஒதுக்கீட்டை உபயோகித்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணி, கட்டிடங்களின் தெளிவான உடமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், இடுகாடுகளை சுற்றி வேலியை தயாரித்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |